ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2324/12 – 2023 මාර්තු මස 20 වැනි සඳුදා – 2023.03.20
*2324/12 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78 ( XV ) ( இ )*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இக்கட்டளையின் மூலம், (காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான) 2005 ஆம் ஆணடு யூன் மாதம் 1 ஆந் திகதிய 1395/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், ஊவா வெல்லஸ்ஸ இலங்கைப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள பதிவுகளுக்கு நேரொத்ததாகவுள்ளதும், (2017 ஏப்பிறல் 19 ஆந் திகதிய 2015/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்வட்டவணையின் I ஆம் நிரலிலுள்ள “ 4. தொழில் நுட்பவியற் கற்கைகள் பீடம்” என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தையும் பதிவுகளையும் சேர்ப்பதன் மூலம் திருத்துகின்றேன் :*

1A – PG6266 – 456(2023/03)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| 5. மருத்துவ பீடம் | 1. உடற்கூற்றியல் துறை |
| | 2. உடலியக்கவியல் துறை |
| | 3. உயிர் இரசாயனவியல் துறை |
| | 4. நோய்க்கூற்றியல் துறை |
| | 5. நுண்ணுயிரியல் துறை |
| | 6. ஒட்டுண்ணியல் துறை |
| | 7. மருந்தகத் துறை |
| | 8. தடவியல் மருத்துவத் துறை |
| | 9. பொதுச் சுகாகாரத் துறை |
| | 10. மருத்துவத் துறை |
| | 11. சத்திரசிகிச்சைத் துறை |
| | 12. மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் துறை |
| | 13. குழந்தை மருத்துவத் துறை |
| | 14. மனநல மருத்துவத் துறை |
| | 15. குடும்ப மருத்துவத் துறை |
| | 16. மருத்துவ கல்வித் துறை". |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023 , மாச்சு 17.

EOG 03 - 0270